[1982 செப்டம்பர் 6]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இச்சட்ட முன் வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன் வடிவு பேரவைமுன் அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(முற்பகல் 11.30)

(இ) வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தம்—சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு 1982

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தம்—சிறப்பு விதித்துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்,

திரு. அ. ரகுமான்கான்: பேரவைத் தலைவர் அவர்களே நான் இந்தச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்வதை எதிர்க்கிறேன். காரணம் நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தொடர்ந்து இந்த மன்றத்தில் இப்படிப்பட்ட சட்டமுன்வடிவை அறிமுகம் செய்து நிறைவேற்றி, தனி அலுவலர்களின் பதவிக் காலத்தை நீடித்துக்கொண்டே இருக்கிறார்கள். இந்த விற்பனை அங்காடிகளை ஒழுங்கு படுத்துவதற்கோ அல்லது அவற்றை ஒழுங்காக நடத்துவதற்கோ எந்த வழிமுறையையும் ஏற்படுத்த இதுவரையிலும் முன்வரவில்லை. அவற்றின் அமைப்பு விதித்துறைகளில் மேற்கு வங்காளம், அஸ்ஸாம், இமாச்சலப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் செயலில் உள்ள சட்டங்களுக்கு ஏற்ப விரிவான திருத்தங்களைச் செய்வது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது என்ற ஒரே காரணத்தை தேசிய கீதத்தை இசைப்பதுபோல் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். இந்த தனி அலுவலர்களின் நியமனத்தைத் தவிர்ப்பதற்கும் அங்கே தலைவர் தேர்வு நடத்துவதற்கும் ஏன் இந்த அரசு தயக்கம் காட்டுகிறது என்பது தெரியவில்லை. ஆகவே நான் இதை எதிர்க்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்:

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஈ) வட்டிக்குக் கடன் கொடுப்பவர்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. சி, பொன்னையன்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு வட்டிக்கு கடன் கொடுப்பவர்கள் (திருத்தச்) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.